# கேள்விகள்

1. திருவரங்கத்திற்கு அமைந்துள்ள ஆழ்வார்களின் மங்களா சாஸனப் பாசுரங்கள் எத்தனை?
2. திருவரங்கத்தை மங்களாசாஸனம் செய்திடும் பூதத்தாழ்வார் எந்தப் பாசுரத்தில் மற்றைய திவ்யதேசங்களை திருவரங்கத் தைச் சூழ்ந்திருக்கும் நந்தவனங்களாகக் குறிப்பிட்டுள்ளார்?
3. அயோத்யா, அபராஜிதா ஆகிய சொற்கள் எந்த இடத்தைக் குறிக்கும்? அந்த இடத்தில் எம்பெருமானை எந்த நிலையில் யார் அனுபவித்துக் கொண்டுவருகிறார்கள்?
4. ‘திறம்பாவழி’ என்றால் பொருள் என்ன?
5. பேயாழ்வார், எம்பெருமான் அவர்தம் நெஞ்சை அடைந்த பின்பு எந்தெந்த திவ்யதேசங்களைக் காட்டிலும் ஆழ்வாரின் நெஞ்சமே அவன் உகந்துவாழும் இடமாகக் கொண்டுள்ளதைக் குறிப்பிடுகின்றார்?
6. இராமபிரான் சிறுவனாய் இருந்த போது விளையாட்டுக்காக கைக்கொண்டிருந்த சிறிய வில்லிலே உண்டையை வைத்து கூனி மீது எறிந்தான் என்று திருமழிசையாழ்வார் எந்தப் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்?
7. மோடி என்னும் சொல் யாரைக் குறிக்கும்?
8. “அடியார்களுடைய அனுபவத்தில் ஏற்படும் இன்பமும் எம்பெருமானுக்கு உரியது என்ற நினைவினைக் கொள்ளாதவருடைய நினைவை அழிப்பதற்காக ஸ்ரீராமன் அரங்கனாக இங்கு கண்வளர்ந்து அருளுகிறான்” என்று திருமழிசை ஆழ்வார் எந்தப் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்?
9. ஸம்ஸாரிகளோடு தோள்தீண்டியாக எம்பெருமான் சயன திருக்கோலத்தில் எழுந்தருளியிருப்பதாக எந்தெந்த திவ்ய தேசங்களை நான்முகன் திருவந்தாதியில் திருமழிசை யாழ்வார் குறிப்பிடுகிறார்?
10. திருவரங்கத்தை மங்களாசாஸனம் செய்திடும் திருவாய் மொழிப் பாசுரங்களில் எம்பெருமானின் எந்த நிலை கொண்டாடப்படுவதாக அழகியமணவாளப் பெருமாள் நாயனார் அறுதியிட்டுள்ளார்?

11. "மாயோனை மணத்தூணே பற்றி நின்று என் வாயார என்றுகொளோ வாழ்த்தும் நாளே" என்று அருளிச் செய்தவர் யார்?
12. "தேட்டருந்திறல்தேனினை" என்று தொடங்கும் பதிகத்தைப் பங்குனி ப்ரஹ்மோத்ஸவத்தில் தீர்த்தவாரி அன்று அரையர்கள் அபிநயம் செய்ததாக முதலாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகின்றது. அந்தக் கல்வெட்டு எண் என்ன? அது எங்கே அமைந்துள்ளது?
13. 'யானும் ஓர் பேயனே' என்று தன் நிலைமையைக் கூறிக் கொள்ளும் ஆழ்வார் யார்?
14. இருவாட்சிப் பூச்சூட்டிட பெரியாழ்வார் எந்த திவ்யதேசத்து எம்பெருமானை அழைக்கிறார்?
15. தசாவதாரங்களையும் பெரியாழ்வார் போற்றிப் புகழ்ந்துள்ளார். அது எந்தப் பாசுரத்தில்?
16. பெரியாழ்வார் அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்த பதிக எண் என்ன?
17. செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் செய்யும் தொழில் என்ன?
18. மானமிலா பன்றியாய் அவதாரமெடுத்தவனே திருவரங்கத்தில் பள்ளிகொண்டுள்ளான் என்று சூடிக்கொடுத்த நாச்சியார் எந்தப் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்?
19. மெய்மைப் பெருவார்த்தை என்றால் எதைக் குறிக்கும்? அதை யார் அருளிச்செய்ததாக நாச்சியார் திருவுள்ளம் பற்றுகிறார்?
20. அர்ச்சையில் திருவரங்கத்து எம்பெருமானை மட்டுமே மங்களாசாஸனம் செய்தருளிய ஆழ்வார் யார்?
21. க்ஷத்ரபந்து என்பான் யார்? அவன் எவ்வாறு நற்கதிப் பெற்றான்?
22. ''நமக்கு வகுத்த ஸ்வாமியான பெரிய பெருமாள் அருகிலேயே இருக்க அவரை அண்டாதவன் பிணத்தைக் கழுகுகள் கூட சீண்டாது'' என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்துள்ளார். அந்தப் பாசுர எண்ணைக் குறிப்பிடவும்?

23. நம் சேவகனார் மருவிய கோயில் எது?
24. பெரிய பெருமாள் தென்திசை நோக்கிப் பள்ளிக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? இதற்கான காரணத்தை வெளிப்படுத்திய ஆழ்வார்கள் யாவர்?
25. ஶங்கநிதி, பத்மநிதி ஆகியோருடைய விக்ரஹங்கள் ராஜமகேந்திரன் திருச்சுற்றின் எந்தப் பகுதியில் அமைந்துள்ளன? இதற்கு என்ன காரணம்?
26. பெரிய பெருமாளை திருவடி தொடங்கி திருமுடி ஈறாக அனுபவதித்த ஆழ்வார் யார்?
27. திருவேங்கடவனை மங்களாசாஸனம் செய்வதற்காக பெரிய பெருமாளிடம் அனுமதி கேட்டுவந்த அரையர் திருநாமம் என்ன? அவர் திருமலை யாத்திரையை மேற்கொண்டாரா?
28. "பாவோ நாந்யத்ர கச்சதி" என்று யார் எப்போது கூறினார்?
29. சக்ரவர்த்தி திருமகன் வழிபட்ட பெரிய பெருமாளை அவராகவே சொல்லக்கூடுமோ இதற்கு என்ன ப்ரமாணம்?
30. திருக்கரம்பனூரை எந்தப் பாசுரத்தில் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளார்?
31. அடியார் மனத்து என்றும் தேனாகி அமுதாகித் திகழ்பவன் யார்?
32. திருக்கோவலூரில் இரப்பாளனாய் இருந்தவனை இன்று நாம் எங்கே காணலாம்?
33. பந்தமறுப்பதோர் மருந்து எங்கே கிடைக்கும்?
34. அன்னமாய் அருமறைப் பயந்தவன் எங்கே கண்வளர்ந்தருளுகிறான்?
35. சுரிகுழல் கனிவாய்த் திருவினை பிரித்த கொடுமையாளன் யார்?
36. ஆழியால் அன்றங்கு ஆழியை மறைத்தான் இன்று எங்கே உளான்?
37. குகப்பெருமாளிடம் அமைந்திருந்த மூன்று குறைபாடுகள் யாவை?
38. த்ருஷ்டா ஸீதா என்று கூறியது யார்? அதற்கு அவர் பெற்ற பரிசு யாது?
39. த்வராயை நம: யார் எந்த நூலில் இவ்வாறு கூறியுள்ளார்?

40. ஸுமுகன் என்ற பாம்பின் தற்போதைய இருப்பிடம் எது?
41. சாந்தீபநி முனிவர் கண்ணபிரானிடம் குருதட்சணையாக என்ன கேட்டார்?
42. திருவரங்கத்தில் அரங்கன் திருப்பள்ளிக் கொண்டருளு வதற்கான காரணமாக எதை திருமங்கையாழ்வார் 5-8-8 பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்?
43. திருவரங்கத்தையே பரகாலநாயகி வாய் தவறி திருக் கண்ணபுரம் என்று குறிப்பிடுவதாக எந்தப் பெரியதிரு மொழி பாசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?
44. கண்ணாலே தின்னும் கரும்பு எங்கே கிடைக்கும்?
45. திருமங்கையாழ்வாருடைய கொள்கை என்ன? அதனை எந்தப் பாசுரத்தில் வெளிப்படுத்தியுள்ளார்?
46. கட்டுவிச்சி பரகால நாயகியின் அன்னையிடம் என்ன சொன்னாள்?
47. அடங்காப் பெண் யார்? அவளால் யார் என்ன பழிக்கு ஆளானார்?
48. பரமபதத்திலிருந்த அமுதக் கடலிலிருந்து ஒரு குமிழி புறப்பட்டு ஒரு குளத்திலே வந்து தேங்கினாப் போலே இருக்கிறது திருவரங்கம் பெரியகோயிலிலே கண்வளர்ந் தருளும் நிலை என்ற பொருள்படும் திருநெடுந்தாண்டகப் பதிக எண் எது?
49. நிறையழிந்தார் என்பார் யார்? அவர்கள் செய்ய முற்படும் செயல் என்ன?
50. திருவரங்கம் பெரிய கோயிலுக்கு போகும் வழியிலுள்ள கட்டுச்சோறு போன்ற திவ்ய தேசங்கள் யாவை?
51. ஜனகர் செய்த யாகத்தில் வேதவ்யாஸர் எந்தப் புராணத் தைச் சொன்னார்?
52. சேஷபீடம் (அனந்த சய்யை) எங்கே உள்ளது?
53. ஜிதந்தேஸ்தோத்ரம் எத்தனை ஶ்லோகங்களைக் கொண்டது?
54. சந்திர புஷ்கரிணியையும் ஸ்ரீரங்க விமானத்தையும் யார் ரக்ஷித்து வருவதாக சதாத்யாயீயில் கூறப்பட்டுள்ளது?
55. ஸ்ரீரங்க விமானம் தனக்கு இராமனால் கொடுக்கப்பட்ட விவரத்தை விபீஷணன் ரங்கநாதனிடம் சொல்லுவதாக சதாத்யாயீயின் எந்த அத்யாயம் அமைந்துள்ளது?

56. சந்திர புஷ்கரிணிக்கு அந்தப் பெயர் வந்ததற்கான காரணம் என்ன?
57. சந்திர புஷ்கரிணியைப் போல் புனிதம் பெற்ற மற்றைய தீர்த்தங்கள் திருவரங்கத்தில் எங்கே அமைந்துள்ளன?
58. ஸ்ரீரங்க விமானத்தை ஒரு ஸாமான்ய விமானமாக நினைப்பவன் என்ன கதியை அடைவான்?
59. கதம்ப தீர்த்தத்தின் கரையில் உள்ள கதம்ப விருக்ஷத்தைப் பூஜித்தால் என்ன பலன் கிடைக்கும்?
60. சுக்லபக்ஷ பஞ்சமியில் வில்வமரத்தை ஆராதித்தால் என்ன பலன் கிடைக்கும்?
61. குணவானான கணவனை அடைய வேண்டுமானால் எந்த திதியில் வில்வ மரத்தை பூஜிக்கவேண்டும்?
62. தசாத்யாயீ எந்த புராணத்தின் உள்ளீடாக அமைந்துள்ளது?
63. மாகஸ்னானம் என்றால் என்ன? அதனால் என்ன பலன் கிடைக்கும்?
64. எம்பெருமான் ஹயக்ரீவாவதாரம் எடுத்தது எதற்காக?
65. ஸ்ரீரங்க விமானம் எங்கிருந்து வெளிப்பட்டது?
66. அர்ச்சாரூபியாய் எம்பெருமான் அவதரித்ததற்கான காரணங்களாக தசாத்யாயீயில் கூறப்பட்டுள்ளவை யாவை?
67. “ஸ்வயம்வ்யக்த க்ஷேத்ரங்கள்” யாவை?
68. ஸ்ரீரங்க விமானம் காவிரி தீரத்தில் எந்த மாதம் எந்த பக்ஷம் எந்த திதியில் எந்த நாளில் சந்திரன் மற்றும் குரு எந்தெந்த நக்ஷத்திரங்களில் இருந்த போது விபீஷணனால் ப்ரதிஷ்டிக்கப்பட்டது?
69. ரங்க விமானத்தை வலம் வருவதால் கிடைக்கும் பலன்கள் என்ன?
70. ஸ்ரீரங்கத்தில் உள்ள சந்திரபுஷ்கரிணி எந்த வேதத்தின் ஸ்வரூபமாக கொள்ளப்படுகின்றது?
71. ஸப்தப்ராகாரங்களும் எந்தெந்த லோகங்களைக் குறிப்பிடு கின்றன?
72. வாகனங்கள் எந்த சாஸ்திரத்தைக் குறிப்பிடுகின்றன?
73. ஸ்ரீரங்க விமானத்தில் எத்தனை கலசங்கள் உள்ளன? அவை எதைக் குறிக்கின்றன?
74. ஸ்ரீரங்கநாதனுக்கு மனிதர்களாலும் அரசர்களாலும் ஆபத்து விளைவிக்கப்படும்போது யார் வந்து ஆராதனத்தை மேற்கொள்ளுவார்?

75. க்ஷீராப்தியில் விதை உண்டாகி, விரஜையில் முளை விட்டு, ஸரயூவில் துளிர்த்துப் பூத்து, காவிரிக்கரையில் பழம் கொடுப்பது எது?
76. பாரமேஶ்வர ஸம்ஹிதையின் எத்தனாவது அத்யாயத்தில் ஸ்ரீரங்க மாஹாத்மியம் சொல்லப்பட்டுள்ளது?
77. சதாத்யாயீ ஶ்லோகங்களே ஆளவந்தாருடைய ஸ்ரீ ஸூக்தி களில் காணப்படும் சில ஶ்லோகங்களுக்கு மூலம் என் பதை எவ்வாறு நிரூபிக்க முடியும்?
78. ஸ்ரீமணவாள மாமுனிகள் எந்த ஸ்ரீ வசன பூஷண ஸூத்ர வ்யாக்யானத்தில் "காருடபுராணத்தில் கோயில் மாஹாத் மியத்தில் கதையும்" என்று மேற்கோள் காட்டியுள்ளார்?
79. ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் தம்முடைய எந்த நூலில் எத்தனையாவது ஶ்லோகத்தில் சேஷபீடத்தைக் குறிப்பிட் டுள்ளார்?
80. நிசுளாபுரி என்றால் எந்த ஊரைக் குறிக்கும்?
81. திருச்சிராப்பள்ளி என்ற பெயர் ஏன் ஏற்பட்டது?
82. ஸப்தாவரணம் என்றால் என்ன? தற்போது நடைபெறும் ஸப்தாவரணம் பண்டைய நூல்களில் குறிப்பிட்டுள்ள வாறு நடைபெறுகிறதா?
83. திருவரங்கத்தில் சமீவ்ருக்ஷம் எங்கே அமைந்துள்ளது?
84. புஷ்பயாகம் என்று நடைபெறுகின்றது?
85. நம்பெருமாள் உத்ஸவத்திற்கான ப்ரதிஸரத்தை எங்கே கட்டிக்கொள்கிறார்?
86. சோணாயிரம் கொண்டான் என்றால் என்ன?
87. அனைத்து ப்ரஹ்மோத்ஸவங்களிலும் கொடியேற்ற நாளன்று பஞ்சாங்க ச்ரவணம் எங்கே நடைபெறும்?
88. சமாதானப் பொங்கல் என்ற தளிகை பங்குனி ப்ரஹ்மோத் ஸவத்தின் எந்த நாளன்று யார் யாருக்காக அனுப்பி வைப்பார்?
89. கோயில் மஹாஜனம் உபயம் உறையூரில் எங்கு நடை பெறுகின்றது?
90. அனைத்து திருவீதிப் புறப்பாடு உத்ஸவங்களின் போதும் ஏழாம் திருநாளன்று காலை நம்பெருமாள் ஏன் திருவீதி களில் எழுந்தருளுவதில்லை?

91. ப்ரணய கலஹத்தின் போது யார் சமாதானம் செய்து வைக்கிறார்?
92. நாச்சியார் ஸந்நிதியில் கத்யத்ரய கோஷ்டி எப்போது நடை பெறும்?
93. வசந்தனுக்கு அருளப்பாடு எப்போது நடைபெறும்?
94. மாடமாளிகைசூழ் திருவீதிக்கு தற்போது என்ன பெயர்?
95. பங்குனி உத்தரத்தில் அவதரித்தருளிய ஆசார்யன் யார்?
96. பங்குனி ஹஸ்தத்தில் அவதரித்தவர் யார்? இவர் அருளிச் செய்த துதி நூலின் பெயர் என்ன?
97. ஸ்ரீரங்க நாராயண ஜீயர் பட்டத்தை அலங்கரித்த முதல் ஜீயர் யார்?
98. அனைத்து நான்காம், ஆறாம், எட்டாம் திருநாட்களில் எந் தெந்த வாஹனங்களில் நம்பெருமாள் எழுந்தருளுகிறார்?
99. பங்குனி மூன்றாம் நாள் உத்ஸவத்தில் ஒருகாலத்தில் நம் பெருமாள் குதிரை வாஹனத்தில் எழுந்தருளப்பண்ணப் பட்டார் என்ற கூற்று சரியா? தவறா?
100. திங்களும் விழவறாத வீதி என்று எந்தத் திருச்சுற்றுக்குப் பெயர்?
101. திருவரங்கம் பெரிய கோயிலில் படியெடுக்கப்பட்ட கல் வெட்டுகள் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் எத்தனையாவது பகுதியாக வெளியிடப்பட்டுள்ளது?
102. திருவரங்கத்தில் காணப்படும் மிகப்பழமையான கல் வெட்டு யாருடைய ஆட்சி காலத்தில் ஏற்படுத்தி வைக்கப்பட்டுள்ளது?
103. செப்பேடு என்றால் என்ன பொருள்?
104. வேள்விக்குடி செப்பேடுகள் எந்த பாண்டிய மன்னனால் ஏற்படுத்திவைக்கப்பட்டன?
105. பிற்காலச் சோழ பரம்பரையை தோற்றுவித்தது யார்?
106. அன்பில் செப்பேடுகளில் குறிப்பிடப்படும் சுந்தர சோழ னின் முதல் மந்திரியான அனிருத்த ப்ரஹ்மராயருக்கும், ஸ்ரீரங்கம் கல்வெட்டு எண் 10 க்கும் அமைந்துள்ள தொடர்பு என்ன?
107. ஐப்பசியில் ப்ரஹ்மோத்ஸவம் நடைபெற்றதை பல கல் வெட்டுகள் தெரிவிக்கின்றன. அவற்றில் இரண்டு கல் வெட்டு எண்களையும், அவை அமைந்துள்ள இடங்களை யும் குறிப்பிடுக.

108. ஆழ்வார் கந்மிகள் என்றால் என்ன பொருள்?
109. 'திங்களேர் தரு தன்றொங்கல் வெண்குடைக்கு நிலமகள் நிலவ மலர் மகள் புணர்ந்து' என்று தொடங்கும் மெய்க் கீர்த்தி எந்த சோழ மன்னனுடையது?
110. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் தரிசாய்க் கிடந்த நிலங்கள் விளைநிலமாய் ஆக்கப்பட்டன என்று கல் வெட்டுகள் மூலம் அறியப்படுகின்றது. அந்த விளைநிலங் களின் வருவாயைக் கொண்டு அவர்கள் என்ன செய் தார்கள்?
111. இராமாநுசருக்கு பிக்ஷையின் போது விஷமிடப்பட்டது என்பதை குருபரம்பரை நூல்கள் தெரிவிக்கின்றன. அதன் எதிரொலியாக முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸந்யாசிகளுக்கு நேரக்கூடிய இதுபோன்ற ஆபத்துக்களை தடுத்து நிறுத்துவதற்கு ஓர் ஏற்பாடு செய்யப்பட்டது. அதைத் தெரிவிக்கும் கல்வெட்டு எண் என்ன?
112. பங்குனி ப்ரஹ்மோத்ஸவத்தில் தீர்த்தவாரியன்று அழகிய மணவாளன் அரையர்களின் அபிநயத்தோடு கூடிய எந்தத் திருப்பதிகத்தை எந்த இடத்தில் கேட்டருளினார் என்று முதலாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது?
113. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் நந்தவனங்களுக்கு அழகான பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அவற்றில் நான்கு திருநந்தவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
114. திருவிளக்கிற்கான நெய்யுடன் பீமஸேனி கர்ப்பூரம் சேர்க்கப்பட்டதாகக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டு உள்ளன. ஏன் அவ்வாறு செய்யப்பட்டது?
115. அழகிய மணவாளனுக்கு ஸ்ரீபாதசாலம் என்ற ஆபரணத் தை முதலாம் குலோத்துங்கன் காலத்தில் யார் ஸமர்ப் பித்தார்?
116. திருவரங்கம் திருக்கோயிலுக்கு ஆடுகள் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன என்று கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகின்றது. ஏன் அவ்வாறு ஆடுகள் தானமாகக் கொடுக்கப்பட்டன?

117. திருவரங்கத்தில் அமைந்திருந்த பெரும்பாலான நந்தவனங்கள் இந்த திவ்யதேசத்தின் எந்தப் பகுதியில் அமைந்திருந்தன?
118. திருவரங்கம் பெரியகோயிலில் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் ஸ்ரீகார்யம் பதவி வகித்துவந்தவர்களாக பலர் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வரைக் குறிப்பிடவும்.
119. மலையாளர்கள் பெருமளவில் பங்குனி ப்ரஹ்மோத்ஸவத்திற்கு வருகை தந்துள்ளனர் என்பதை விக்ரம சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. அதன் எண் என்ன?
120. விக்ரம சோழன், அகளங்கன் ஆகிய பெயர்கள் வெவ்வேறு நபர்களை குறிப்பதா? அல்லது ஓரே நபரைக் குறிப்பதா? இந்தப் பெயர்களுக்கும், திருவரங்கத்திற்கும் அமைந்துள்ள தொடர்பு என்ன?
121. சோளேந்திர ஸிம்ஹன் என்ற விருதுபெயரைக் கொண்ட சோழமன்னன் பெயர் என்ன? இவன் திருக்கோயிலுக்கு தன் பெயரில் ஓர் யானையைக் கொடுத்ததாக திருவாய்மொழிப் பாசுரம் ஒன்றில் குறிப்பு காணப்படுகின்றது. அந்த திருவாய்மொழிப் பாசுரத்தைக் குறிப்பிடுக.
122. அழகிய மணவாளன் மண்டபங்களிலே எழுந்தருளும் போது சேர பாண்டியன் என்றதொரு சிம்மாசனத்தில் எழுந்தருளியிருப்பார். இந்த சிம்மாசனத்தை ஸமர்ப்பித்த சோழ மன்னன் யார்?
123. சேர பாண்டியன் என்ற சிம்மாசனத்தை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் எந்தத் திருப்பாவை பாசுர உரையில் குறிப்பிட்டுள்ளார்?
124. மூன்றாம் குலோத்துங்க சோழனின் குலதனமாய் விளங்குவது ஸ்ரீரங்கநாதன் என்று ஒரு கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் எண் என்ன?
125. திருவரங்கத்தில் ‘தைய்வத்தரயன்’ திருநாள் என்று ஒரு விழா கொண்டாடப்பட்டுள்ளது. தற்போது அந்த விழா நடைபெறுகிறதா? இவ்வாறாக ஒரு விழா நடைபெற்றதாக மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. அந்தக் கல்வெட்டு எண் என்ன? அது

இந்த திருக்கோயிலின் எந்தப்பகுதியில் அமைந்துள்ளது?

126. அழகிய மணவாளனுக்கு ரோஹிணியில் கொடியேற்றமாகி பங்குனி உத்தரத்தில் தீர்த்தவாரி நடைபெறுகிறது. ஆனால் பஞ்சபர்வ புறப்பாடுகளில் ரேவதி நக்ஷத்ரத் தில்திருமஞ்சனம் நடைபெறுகின்றது. ஸ்ரீரங்கநாதன் ப்ரதிஷ்டை கண்டருளியது ரோஹிணியிலா? அல்லது ரேவதியிலா? இதற்கான விடை எங்கே உள்ளது?

127. காவிரி நதி தற்போதைய ராஜகோபுரத்திற்கு அண்மையில் ஓடிக் கொண்டிருந்தது என்பதை மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது. அதன் எண் என்ன? அந்தக் கல்வெட்டு திருக்கோயிலின் எந்தத் திருச்சுற்றில் அமைந்துள்ளது?

128. வெள்ளைத் திருமுற்றத்தாழ்வார் கோயில் அதைச் சார்ந்த திருக்குளம், நந்தவனம் ஆகியவை திருவரங்கத்தின் எந்தப் பகுதியில் அமைந்திருந்தன?

129. மதுரையும், ஈழமும், கரூரும்,பாண்டியன் முடித்தலையும், கொண்டருளி விஜயாபிஷேகமும்,வீராபிஷேகமும் பண்ணியருளின திரிபுவன வீரதேவர் என்று குறிப்பிடப் படும் சோழமன்னன் யார்?

130. திருவிடையாட்டம், திருநாமத்துக்காணி, திருப்பள்ளித் தாமம் ஆகிய சொற்களுக்கு என்ன பொருள்?

131. திருக்கோயிலில் திருவாராதனத்தின் போது ஸ்ரீபுராணம் வாசிக்கப்பட்டதாக நாழிகேட்டான் கோபுர நுழைவாயில் சுவரில் அமைந்துள்ள கல்வெட்டு வழி அறியப்படு கின்றது. ஸ்ரீபுராணம் என்றால் எதைக் குறிக்கும்?

132. உத்தமசீலி சதுர்வேதி மங்கலத்தில் எழுந்தருளியிருந்த எம்பெருமான் திருநாமம் என்ன?

133. சுந்தரபாண்டிய தேவர் என்று பெரிய திருமொழி10-4-1 பாசுர விளக்கவுரையில் நஞ்சீயர் ஒரு மன்னனைக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு குறிப்பிடப்படும் மன்னன் யார்?

134. சோணாடு வழங்கியருளிய ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர் என்று குறிப்பிடப்படும் பாண்டியமன்னன் யார்?

135. இந்தப் பாண்டிய மன்னன் மிகப்பெரியதொரு நிர்வாஹ சீர்திருத்தத்தை இந்த திருக்கோயிலில் அமுல்படுத்தினான்

அது என்ன? ஏன் அந்த அவலநிலை ஏற்பட்டது?

136. ஹொய்சாள மன்னனான வீர சோமேச்வரனை வென்ற பாண்டிய மன்னன் யார்?
137. ஸ்ரீரங்க விமானத்திற்கு பொன்வேய்ந்த பாண்டிய மன்னன் பெயர் என்ன?
138. இந்தப் பாண்டிய மன்னன் மேற்கொண்ட மற்றைய திருப் பணிகள் யாவை?
139. பெருமாள் தேவன் திருமண்டபம் என்று எந்த மண்டபத் தைக் குறிப்பிடுகின்றோம்? யார் இந்தப் பெருமாள் தேவன்?
140. அடுக்களைப்புற காரியங்கள் என்றால் என்ன பொருள்?
141. பொன் மேய்ந்த பெருமாள் ஸந்நிதி திருக்கோயிலின் எந்தப் பகுதியில் அமைந்திருந்தது? அந்தப் பெருமாளுக்கு நேர்ந்த ஆபத்து என்ன?
142. மலைக்கினிய நின்றான் என்ற சொல்லுக்கு பொருள் என்ன? எந்த திவ்ய தேசத்து எம்பெருமானை இந்தச் சொல் குறிப்பிடும்?
143. கலியுகராமன் சதுர்வேதி மங்கலம் திருவரங்கத்தின் எந்தப் பகுதியில் அமைந்திருந்தது?
144. இந்த சதுர்வேதி மங்கலத்தை ஏற்படுத்தி வைத்த பாண்டிய மன்னன் பெயர் என்ன?
145. அழகிய மணவாளன் ஆணையிடும் போது அதன் முக வுரையாக சில சொற்றொடர்கள் காணப்படுகின்றன. அந்தச் சொற்றொடர்களைக் குறிப்பிடுக.
146. இந்தச் சொற்றொடர்களை இன்றும் நாம் ஓர் உத்ஸவத்தின் போது கேட்டு மகிழ்கிறோம். அது எந்த உத்ஸவம்?
147. கிழக்கு சித்திரைவீதியில் அமைந்துள்ளது கலியுக ராமன் கோபுரம். மற்றைய கோபுரங்களில் காணஇயலாத ஓர் கட்டமைப்பினை இந்தக் கோபுரத்தில் நாம் காணலாம். அது என்ன?
148. திருவரங்கத்தில் எந்தெந்த பாண்டிய மன்னர்களின் கல் வெட்டுகள் காணப்படுகின்றன?
149. சித்திரைவிஷு அன்று திருப்பள்ளியறையிலே அழகிய மணவாளப் பெருமாள் நாச்சிமாருடன் கூட இருந்து திரு வாராதனம் கண்டருளும் வேளையில் பெருமாளிடம் அனு

மதி வேண்டி விண்ணப்பம் செய்ததாக மூன்றாம் சடைய வர்மன் சுந்தர பாண்டியன் காலத்துக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. அவர்கள் செய்த விண்ணப்பம் என்ன?

150. திருவரங்கத்தின் ஒருபகுதியாய் விளங்கிய கோதண்டராம சதுர்வேதிமங்கலத்தில் ப்ரதிஷ்டிக்கப்பட்ட பெருமாளுக்கு அமைந்த திருநாமம் என்ன?

151. இறையிலியாக அளிக்கப்பட்ட நிலமென்றால் என்ன பொருள்?

152. பாண்டியன் ஆட்சிகாலத்தில் விதிக்கப்பட்ட வரிகளாக சில திருவரங்கம் கோயில் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவற்றில் நான்கைக் குறிப்பிடுக.

153. எடுத்தகை அழகிய நாயனார் திருக்கோயில் திருவரங்கத்தில் எங்கே அமைந்துள்ளது?

154. தாஸநம்பிகள் என்றால் யாரைக் குறிக்கும்? இவர்கள் மேற்கொண்டு வந்த கைங்கர்யமாக கல்வெட்டுகள் எதனைக் குறிப்பிடுகின்றது?

155. திருவரங்கம் கல்வெட்டுகளில் திருமுடிக்குறை, திருவடிக்குறை ஆகிய பகுதிகள் குறிப்பிடப்படுகின்றன. அவை திருவரங்கத்தின் எந்தப் பகுதியில் அமைந்திருந்தன?

156. சேனை முதலியார் ஸந்நிதியில் வெளிமண்டபத்தைக் கட்டியவன் பெயர் என்ன? அதைக் குறிப்பிடும் கல்வெட்டு எண் என்ன?

157. ஸ்ரீரங்கநாதனுக்கு தானமாகக் கொடுக்கப்பட்ட புஞ்சை, நஞ்சை நிலங்களிலிருந்து பெறப்படும் வருவாயைக் கண்காணிப்பதற்கு ஓர் ஸந்யாசியை அழகிய மணவாளன் நியமித்தருளியதாக பாண்டியர் காலத்துக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. அது எங்கே அமைந்துள்ளது?

158. அந்த ஸந்யாசிக்கான தகுதிகளாக அந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவை யாவை?

159. அந்த ஸந்யாசியை யார் தேர்ந்தெடுக்க வேண்டும்?

160. அவருக்கு உதவியாளராக யார் நியமிக்கப்பட்டவர்?

161. ரங்கவிலாஸ மண்டபத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கிருஷ்ணன் ஸந்நிதிக்கு கல்வெட்டுகளில் என்ன பெயர் காணப்படுகின்றது.

162. இந்த ஸந்நிதியை யார் ஏற்படுத்தி வைத்தார்?
163. கல்வெட்டு எண் 262 இல் தேவாரத்து இறைஅண்ணன் என்ற சொல் காணப்படுகின்றது. இதற்கு என்ன பொருள்?
164. தன்வந்திரி ஸந்நிதி திருக்கோயிலில் எந்தத் திருச்சுற்றில் அமைந்துள்ளது?
165. இதன் நிர்வாஹப் பொறுப்பு யாரிடம் இருந்தது?
166. இந்த ஸந்நிதியை எடுத்துக் கட்டியவர் யார்?
167. அவர் எந்த மன்னன் காலத்தில் இந்தப் பணியை மேற் கொண்டார்?
168. குடிநீர் என்றால் என்ன பொருள்?
169. இந்தக் குடிநீரை தயாரித்து வந்தவருக்கு என்ன ஊதியம் கொடுக்கப்பட்டது?
170. இவருடைய உதவியாளர் பெயர் என்ன?
171. இந்தக் குடிநீரை தயாரித்த பிறகு இந்த ஸந்நிதியின் பொறுப்பாளர் என்ன செய்ய வேண்டும்?
172. கம்பட்டத்து ஆணிக்காரர் என்றால் யாரைக் குறிக்கும்?
173. அரண்மனை குடிநீர் சாவாசி என்றால் என்ன பொருள்?
174. முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் ரத்தினம் பதிக்கப் பட்ட ஸ்வர்ண கீரீடம் ஒன்றினையும் வெள்ளியினாலான காளாஞ்சி ஒன்றினையும் ஸமர்ப்பித்ததாக ஓர் கல்வெட்டு தெரிவிக்கின்றது. அதன் எண் என்ன? அது எங்கே அமைந்துள்ளது?
175. பவித்ர மண்டபத்தின் மேற்குப் பகுதியில் எழுந்தருளி யுள்ள ஸரஸ்வதி, வேதவ்யாஸ பகவான் மற்றும் ஹயக்ரீவர் ஆகியோருடைய விக்ரஹங்கள் யாரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டன?
176. இந்தத் திருமேனிகள் இந்த இடத்தில் ப்ரதிஷ்டை செய்யப் பட்டதற்கான காரணம் என்ன?
177. இந்த விக்ரஹங்களின் ப்ரதிஷ்டைக்கும், திருவமுது படைப்பதற்கும் ஒரு லட்சம் காசு தானமாகக் கொடுத்த இந்தக் கொடையாளி திருவானைக்கா கோயிலிலும் ஓர் தர்மத்தை ஏற்படுத்தி வைத்துள்ளார். அது என்ன?
178. ஸ்ரீரங்கநாதனுடைய திருமேனியை ப்ரதிஷ்டித்து தீபோத் ஸவம் கொண்டாடியதாக ஸ்ரீரங்கம் கல்வெட்டு எண் 281 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரமான

திருவரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய திருமேனியை நூதனமாக ப்ரதிஷ்டிக்க வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது?

179. பகல் பத்தில் ஆயிரந்தோளால் அலைகடல் கடைந்தான் என்ற பெரிய திருமொழி 5-7-4 பாசுர விண்ணப்பத்தின் போது அரையர் என்ன செய்கிறார்?

180. 'உடம்பை இருக்குவாதம் வந்ததுபோலே விகாரமில்லாமல் விளங்குவதற்கு நீங்கள் சாப்பிட்டு இருக்கும் மருந்திலே ஒரு கையளவு எனக்கு கொடுக்கக் கூடாதா' என்று எந்த ஆழ்வார் நம்மிடம் கேட்கிறார்? அது எந்த திவ்யப்பிரபந்தப் பகுதியில் அமைந்துள்ளது? அதன் எண் என்ன?

181. 'நீலமே அண்டைகொண்டு' என்று திருச்சந்தவிருத்தம் 49 ஆம் பாசுரத்தில் திருமழிசையாழ்வார் குறிப்பிட்டுள்ளார். அதற்கு என்ன பொருள்?

182. 'கழல்வளையையே கழல்வளையாக்கினார்' என்றால் என்ன பொருள்? இதை யார் அருளிச் செய்தது?

183. நான்மறையின் சொற்பொருளாய் நின்றார் யார்?

184. 'தோழிப்பொங்கல்' என்றால் என்ன? இதனை நாச்சியார் திருமொழி எந்தப் பாசுர உரையில் பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்?

185. காவிரியில் காணப்படும் காட்சிகளாக பெரியதிருமொழி 5-4-2 பாசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை யாவை?

186. பெரியதிருமொழி 5-5-1 பதிகம் யாருடைய திருவாக்காக அமைந்துள்ளது?

187. ஆண்மகனாய் என்மகளை ஒருவன் செய்துவிட்டான் என்று ஒரு பெண்ணின் தாயார் பழி சுமத்துகின்றாள். அவ்வாறு செய்தவன் யார்?

188. பனிக்காத்தஅம்மான் என்றால் என்ன பொருள்? அவனை இப்போது எங்கே காணலாம்?

189. அடிநிமிர்ந்த அந்தணன் என்றால் என்ன பொருள்? அவனை இப்போது எங்கே காணலாம்?

190. அன்னமாய் அருமறை பயந்தான் எம்பெருமான் ஏன்? எப்போது?

191. ஓதுவாய்மையும் உவனியப்பிறப்பும் உனக்கு முன் தந்த அந்தணன் ஒருவன் என்று திருமங்கையாழ்வார் பெரிய

திருமொழி 5-8-7 பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்த அந்தணனுக்கு இணையான பெருமை கொண்ட ஒர் அந்தணனை பெரியவாச்சான்பிள்ளை குறிப்பிடுகின்றார். அவர் திருநாமம் என்ன?

192. அரங்கமேய அந்தணன் என்றால் யாரைக் குறிக்கும்?

193. திருநெடுந்தாண்டகம் 25 ஆம் பாசுரத்தில் காணப்படும் "என்னை ஆளும் கொண்டு" என்ற சொற்றொடருக்கு என்ன பொருள்?

194. சந்திரபுஷ்கரிணியின் பரப்பளவு ஒவ்வொரு யுகத்திலும் மாறுபட்டுக் கொண்டேயிருக்கும் என்று சதாத்யாயீ எந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

195. தசாத்யாயீயில் எந்த அத்தியாயத்தில் அவதார ரஹஸ்யம் சொல்லப்பட்டுள்ளது?

196. யோகக்ஷேமம் என்றால் என்ன பொருள்?

197. ஸ்ரீரங்கவிமானத்தைப் பற்றிய வர்ணனை தசாத்யாயீயில் எந்த அத்தியாயத்தில் காணப்படுகின்றது?

198. ஸ்ரீரங்கநாதனை பூஜிப்பதற்கு மந்திரம் யாது? பலன் என்ன? என்று தசாத்யாயீயில் எந்த அத்தியாயத்தில் கூறப் பட்டுள்ளது?

199. எந்த சோழ மன்னன் உறையூர் நாச்சியாரை அழகிய மணவாளனுக்கு கல்யாணம் செய்து வைத்தார்?

200. பண்டைய நாட்களில் அழகிய மணவாளன் உறையூருக்கு பங்குனி ப்ரஹ்மோத்ஸவத்தின் எந்த நாளன்று எழுந் தருளினார்? அதில் தற்போது ஏதேனும் மாற்றம் உண்டா?